

# வாரந்தோறும் ஒரு தீபம்!

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)**

**(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)**

**(வியாழன்தோறும்)**

| 31.10.2019 | 11. சபையில் 'மாயமற்ற அன்பு' நிலைத்திருக்கட்டும்! |
|---|---|



குரு அளித்த பயிற்சியை மேற்கொள்ளாமல் "ஆக்கினை செய்யும் உத்திரத்தோடே" தன் சகோதரனை நெருங்கி, "சகோதரனே நான் உன் துரும்பை எடுத்துப்போடட்டும்!" என நீ எப்படி கூற முடியும்? இவ்வாறு அவனை "சகோதரனே...." என அழைப்பதைக்கூட, ஆங்கில மொழி பெயர்ப்பின்படி "சினேகிதனே....." என்று அழைப்பதைக் கூட "நீ எப்படிச் சொல்லலாம்?" என்றே இயேசு மறுத்தார்! ஆம், **குற்றவாளியாய் தீர்க்கும் உத்திரத்தை எடுத்துப் போடாமல், "சகோதரனே....." என்று அழைத்து சொல்லியவர்களை "மாய்மாலக்காரன்!" என்றே அழைத்தார்** (வசனம்.42). கெத்செமனேயில் தன்னைக் காட்டிக்கொடுத்த யூதாஸை, "சினேகிதனே!" என்று இயேசு அழைத்தார்..... ஆனால், அதில் மாய்மாலம் இல்லை! அது ஏனென்றால் "நான் ஒருவரையும் ஆக்கினைத்தீர்ப்பு செய்ய வரவில்லை!" என இயேசு திட்டமாய் கூறினார் (யோவான்.3:17). ஆம், இயேசுவிடம் 'ஆக்கினைதீர்ப்பின் உத்திரம்' இல்லவே இல்லை!

யூதாஸ் கெட்டுப்போனான், அது ஏனென்றால், "கேட்டின் மகன் தானாய் கெட்டுப் போனான்" (யோவான்.17:12), அவ்வளவுதான்! இயேசு அவனை ஆக்கினைக்குள்ளாய் தீர்க்கவில்லை! பழிதீர்க்கவும் இல்லை!

நாமும், நம் குடும்பமும், நம் சபையும் நலம் பெற 'நம் கண்ணின் உத்திரம்' அகற்றி ஜீவிப்போமாக! ஆமென்.

**– ரத்னம்**